# காந்தியிடம் கற்றுக்கொள்வோம்!

- ஆர். சீத்தாராமன்
'குரூப் சி.இ.ஓ', தோகா வங்கி

**பிரான்ஸ் தலைநகர் பாரீஸ் நகர வீதியில் கடந்த மாதம் நான் நடந்து சென்றுகொண்டிருந்தேன். அப்போது, நமது தேசத் தந்தை மகாத்மா காந்தியின் உருவச்சிலையை பார்த்ததும் பரவசமானேன். காந்தியின் சிலை முன் கண் மூடி நின்று அவருக்கு மரியாதை செய்தேன். அவர் நமது தேசத்துக்காக செய்த செயற்கரிய செயல்களை நினைவுகூர்ந்தேன்.**



காந்தி நினைத்திருந்தால், உற்றார் உறவினருடன் சுகவாழ்வு வாழ்ந்திருக் கலாம். ஏராளமான செல்வத்தை சம்பாதித்திருக்கலாம். பிரபலமான வழக்கறிஞராக வந்திருக்கலாம். ஆனால், அவரோ அவரது வாழ்க் கையை பாரத தேசத்துக்காகவும் அதன் விடுதலைக்காகவும் அர்ப்பணித்தார். அவரு டைய அயராத போராட்டத்தால் ஈர்க்கப்பட்ட ஏராளமான இந்தியர்கள், சுதந்திர போராட்டத்தில் இணைந்தனர். அந்த போராட்டம் நாட்டின் விடுதலைக்கு அழைத்துச் சென்றது. அவருக்கு நமது நாட்டிலும் வெளிநாடுகளிலும் பாராட் டுக்கள் குவிந்தபோதும், அவர் அவரது பணிவு, அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்தை ஒருபோதும் கைவிடவில்லை.

ஆனால்... நாம் எப்போதும் நம்மை முன்னிலைப்படுத்திக்கொள்வதிலும், நமக்கான அங்கீகாரத்தையும் நமக்கான கவுரவத்தை முன்னிலைபடுத்திக் கொள்வதிலேயே நேரத்தை செலவிடுகிறோம். நம்மைச் சுற்றி இருப்பவர் களிடையே நமது தற்பெருமைகளை பறைசாற் றிக் கொள்வதில் மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறோம். ஆனால், காந்தி இதிலிருந்து மிகவும் வித்தியாசப்பட்டார். எல்லாவற்றையும் செய்த போதும், எல்லாவற்றையும் சாதித்த போதும் அவர் பணிவுடனே வாழ்ந்தார். பணி வுடனேயே பணியாற்றினார். அவர் ஒருபோதும் அவரை மையப்படுத்தியதில்லை. ஒவ்வொரு மூச்சும் 'வேலை செய். சேவை செய்'. ஆனால் எளிமையாக, பணிவுடன், பற்றில்லாத கடவுளின் குழந்தையை போல் வாழ் என்பதே அவரது வாழ்க்கை நமக்கு சொல்லும் செய்தி.

தங்கள் பெயரை முன்னிறுத்தி உழைத்து, பலர் பிரபலமாகியிருக்கலாம். ஆனால், அவர் களில் எத்தனை பேர் வரலாற்றை மாற்றி யிருக்கிறார்கள்? சிலர் மட்டுமே. இந்த உலகுக் காக நாம் கொடுத்ததும், நமது தியாகமும், நாம் இருந்தபோது நம்முடன் இருந்தவர்களுக்காக நாம் செலுத்திய அன்பும் அமைதியும் மட்டும் தான் நாம் இந்த பூமியை விட்டு சென்றபிறகும் நம்மை நினைவில் வைத்திருக்கும்.

இந்த நாட்டுக்கு சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்தார் என்பதற்காக மட்டும் காந்தியின் பெயர் வாழ்ந்துகொண்டிருக்கவில்லை. அமை தியை கொண்டுவந்த அவரது பாதை, கடவுளுக்கு சேவை செய்வதும், நாட்டுக்காக உழைப்பதும், அவர் பிடிவாதமாக பிடித்து வைத்திருந்த மதிப்பீடுகள், கீதை அவரது உற்ற துணைவ னாகவும் நம்பிக்கைக்குரிய வழிகாட்டியாகவும் இருந்தது.

உலக அமைதிக்காகவும், கொள்கைக்கா கவும், கடவுளுக்காக நாம் நமது வாழ்க்கையை தியாகம் செய்ய வேண்டும். அப்போது மட்டுமே, மாற்றங்களை நமது வாழ்க்கை ஏற்படுத்தும் என்பதே காந்தியின் வாழ்க்கை நமக்கு சொல் லும் முக்கிய செய்தி.

●